Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் ஞூ ஜூன்மீ 27௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 15

## வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப் போர்.

வடமேற்கு ஜெர்மனியில் உள்ள துறைமுகங்களையும், கடற்படைத்தளங்களையும், பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை பலமாகத் தாக்கியதென்று சென்ற வாரச் செய்திகளிலிருந்து தெரியவருகிறது. முக்கியமாக, பிரெமென் என்ற துறைமுகப்பட்டணம் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டது. இந்தத் தாக்குதலைப் பற்றி ஒரு பிரிட்டிஷ் விமான ஓட்டி கூறுவதாவது:—"காலநிலை பிரதிகூலமாயிருந்தது. வடக்குக் கடல் மூடுபனியால் மூடப்பட்டதுபோலிருந்தது. ஜெர்மனியின் கடற்கரையோரம் மங்கலாகத்தெரிந்தது. இடையிடையில், பிரெமென் கடற்கரையில் சங்கமமாகும் ஆறும், பிரெமென் கப்பற்சாலைகளும் புலப்பட்டன. பிரெமென் கப்பற்சாலையைத் தாக்கிக் கொண்டிருக்கும்பொழுது ஒரு பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானம் எதிரி விமானத்தால் நான்கு தடவை தாக்கப்பட்டது. ஆனால் பிரிட்டிஷ் விமானம் அந்த விமானத்தை இடைவிடாது யந்திர பீரங்கியினால் சுட்டுத் துளைத்துவிட்டது. பின்பு, எதிரி விமானம் பின்வாங்கிப் போய்விட்டது. பிரிட்டிஷ் விமானம் திரும்பிவந்து சேர்ந்தது".

வடமேற்கு ஜெர்மனியில் முக்கியமான லட்சியங்களின்மேல், பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளையும், அக்கினி குண்டுகளையும் போட்டனவென்றும், அதனால் பொருட்சேதமும், உயிர்ச்சேதமும் ஏற்பட்டனவென்றும் ஜெர்மன் உத்தியோக சமாச்சார ஸ்தாபனம் ஒப்புக்கொள்கிறது.

மேற்கு ஜெர்மனியில், கலோன், தூசல்தார்ப் என்ற தொழிற்சாலைப் பட்டணங்களின்மேல் பிரிட்டிஷ் விமானப்படை வெடிகுண்டுமாரி பொழிந்தது. நடந்த சண்டையில், இரண்டு பிரிட்டிஷ் விமானங்கள் காணாமற்போயின.

ஜெர்மனியின் தலைநகரான பர்லின்மேல் பிரிட்டிஷ் விமானப்படை வெடிகுண்டுகளைப் போட்டதின் பயனைப்பற்றி, அமெரிக்கப் பத்திரிகைகளில் லாசமோரப், ரூட், என்ற இரண்டு பத்திரிகைக்காரர்கள் விவரமாக எழுதியிருக்கிறார்கள். அவர்கள் கூறுவதாவது:—பர்லினில் எந்தத் திக்கில் போனாலும் உடைந்து விழுந்து கிடக்கும் கட்டடங்களைக் காணலாம். 50 கட்டடங்களில் குறைந்தபட்சம் ஒரு கட்டடமும் முழுவதுமோ, அல்லது பகுதியோ இடிந்து கிடக்கும். ராணுவ சம்பந்தமான லட்சியங்கள் பல தாக்கப்பட்டன. அவைகளில், பெல்லூ பிரதேசத்தில் பட்டாள சாப்பாட்டுச்சாமான் 'டிபோ' ஒன்று இளீஸ்டிரீக் ரயில்வே ஸ்டேஷன், சீமான்ஸ் 'டெலிபோன் கம்பெனி', உல்ஸீன் அச்சடிக்கும் சாலை, இவைகளெல்லாம் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன. இப்படிப்பட்ட வெடிகுண்டு தாக்குதல் காரணமாக, பர்லின் நகர மக்கள் மனோதைரியமிழந்து பீதியடைந்திருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் விமானப்படை கீல் என்ற ஜெர்மன் வடக்குக் கடல் தளத்தைத் தாக்கியிருக்கிறது.

மேற்கு ஜெர்மனியில், கலோன், தூசல்தார்ப் என்ற இடங்கள், சென்ற சனிக்கிழமை பிரிட்டிஷ் விமானங்களால் மீண்டும் தாக்கப்பட்டன.

ஜெர்மன் விமானங்களை நாசம் செய்வதில், புதிய முறையில் செய்யப்பட்ட பிரிட்டிஷ் 'ஸ்பிட்பைர்' விமானங்களும், 'ஹரிகேன்' விமானங்களும் பெரும் புகழ் பெற்றிருக்கின்றன. முன்பு செய்யப்பட்ட இம்மாதிரி விமானங்களைவிட, புதிய விமானங்கள் அதிக வேகமாகச் செல்லக்கூடியவை; அதிக உயரமாகப் பறக்கக்கூடியவை; அதிக நெருப்பு சக்திகொண்டவை. இப்போது பிரிட்டிஷ் விமானப் படை பெற்றுவரும் சிறந்த வெற்றிகளுக்கு, இந்தப் புதிய விமானங்கள்தான் காரணம் என்று தெரிகிறது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை, பிரெமென் துறைமுகப்பட்டணமும், வில்ஹெம்ஷேவன் கடற்படைத் தளமும், பிரிட்டிஷ் விமானங்களின் முக்கியமான லட்சியமாயிருந்தன. வில்ஹெம்ஷேவனில், பெரு நெருப்புகள் உண்டாக்கப்பட்டன. வடமேற்கு ஜெர்மனியில் உள்ள எம்டன், பிரெமர்ஹேவன, தூசல்தார்ப் முதலிய ராணுவ லட்சியங்கள் பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டன.

சென்ற திங்கட்கிழமை இரவு, மேற்கு ஜெர்மனியிலும், வடமேற்கு ஜெர்மனியிலும் நடந்த விமானப் போரில், ஒரே மும்முரமாக தாக்கியபோது 13 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. அன்றையதினம் முழுவதும் நாசமாக்கப்பட்ட ஜெர்மன் விமானங்கள் 20.

ஜெர்மனியை மாத்திரமல்லாமல், ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட பிரான்சின் முக்கியமான இடங்களையும், பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் தாக்கின. பிரான்சின் வடமேற்கு முனையிலுள்ள பிரெஸ்ட் என்ற கடற்படைத்தளம் முக்கியமாகத் தாக்கப்பட்டது; இந்த இடத்தில்தான் 'ஷார்ன்ஹார்ஸ்ட்', 'நீசனோ' என்ற ஜெர்மன் யுத்தக்கப்பல்களும், ஹிப்பர் வகுப்பைச் சேர்ந்த மற்றொரு யுத்தக்கப்பலும், தங்கியிருக்கின்றன. கால நிலை மாறிக் கொண்டேயிருந்தபோதிலும், மேகங்கள் அடிக்கடி மறைத்துக்கொண்டிருந்தபோதிலும், குறிப்பிட்ட லக்ஷியங்களை பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின. குரெஸ்ட் கப்பற் சாலைகளின்மேல், பிரிட்டிஷ் வெடிகுண்டுகள் வெடித்த காக்ஷி மேலே தெரிந்தது.

வடக்கு பிரான்சிலும், இங்கிலீஷ் கால்வாயிலும், பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மன் விமானங்களுடன் போர் புரிந்தன. ஒரு ராணுவ முகாம் பலமாகத் தாக்கப்பட்டது. இந்தப்போரில் 9 ஜெர்மன் விமானங்கள் நாசப்படுத்தப்பட்டன. பிரிட்டன் 4 விமானங்களை இழந்தது. செக்கியர்கள், போலந்து தேசத்தார்கள், பெல்ஜியர்கள், இவர்களெல்லாம் இதில் பங்கெடுத்துக்கொண்டார்கள். பலோன் என்ற பிரெஞ்சு கடற்கரைப் பட்டணம் தாக்கப்பட்டது. 1,500 டன் எடையுள்ள எதிரியின் 'சப்ளை' கப்பல், இரண்டு வெடிகளால் நேர் முகமாகத் தாக்கப்பட்டது. போலந்து தேசத்து ஆகாய விமானிகள், 4 ஜெர்மன் விமானங்களைச் சுட்டு வீழ்த்தினார்கள்.

சென்ற இலையுதிர் காலத்தில், ஜெர்மன் விமானப் படை முன்னேறித்தாக்கியதற்கும், இப்போது பிரிட்டிஷ் விமானப்படை முன்னேறித்தாக்குவதற்கும், ஒரு முக்கியமான வித்தியாசம் இருக்கிறது. பிரிட்டனைப் பாதுகாக்கும் விமானங்கள் எவ்வளவு நஷ்டப்படுகின்றனவோ, அதற்கு அதிகமாக தாக்கும் ஜெர்மன் விமானங்கள் நஷ்டப்படுகின்றன. பிரிட்டன் ஜெர்மனியைத் தாக்கும்போது நஷ்டப்படும் விமானங்களைவிட, அங்கே பாதுகாக்கும் ஜெர்மன் விமானங்கள் அதிகமாக நஷ்டப்படுகின்றன. பிரான்சின் மேலும், இங்கிலீஷ் கால்வாயின் மேலும் நடந்த விமானப் போரில், 16 ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப்பட்டன; 12 பிரிட்டிஷ் விமானங்கள் இழக்கப்பட்டன.

வடக்கு பிரான்சில் லூஹேவர் பட்டணத்தின் கப்பற் சாலைகள், பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டன. கப்பல் நிற்கும் சாலைகளும், 'பெட்ரோல்' சேர்த்துவைத்திருக்கும் களஞ்சியங்களும் வெடிகுண்டுகளுக்கு இலக்காயின.

சென்ற ஞாயிற்றுக்கிழமை, பிரிட்டிஷ் விமானப் படை வடக்கு பிரான்சைத் தாக்கியபோது 30 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. பிரான்சின் கரையோர லக்ஷியங்களைப் பலமாகத் தாக்கியபோது, வெடிகுண்டுகள் வெடித்த அதிர்ச்சி இங்கிலீஷ் கால்வாயைத்தாண்டி, பிரிட்டன் கரையோரத்திலுள்ள கட்டடங்களை அசைத்தது; அந்த அதிர்ச்சியினால் படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தவர்கள் தூக்கம் கலைந்து எழுந்து விட்டார்கள்.

பட்டப்பகலில், பிரிட்டிஷ் விமானங்கள் வடக்கு பிரான்சைத் தாக்கியபோது, எதிரிகளின் ஆகாய விமானச்சாலைகளுள்ள செயின்ட ஓமார் என்ற ஊரும், பலோனும் வெடிகுண்டுகளுக்கு இலக்காயின. பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்கள் பிரான்சில் மிகப் பெரிய தொழிற்சாலைப் பிரதேசங்களின் மேல் வெடிகுண்டுகளைப் போட்டன.

சென்ற வாரத்திய செய்திகளில், ஜெர்மன் விமானங்கள் பிரிட்டனில் சில இடங்களில் வெடிகுண்டுகளைப் போட்டன என்று தெரிகிறது. கிழக்கு மிட்லந்தில் போட்ட சில வெடிகுண்டுகள் சிறிது சேதம் விளைவித்தன. தெற்கே ஒரு பட்டணத்தில், சிறிது பொருட்சேதமும், உயிர்சேதமும் உண்டாக்கப்பட்டது. தென்கிழக்கு, தெற்கு இங்கிலாந்திலும், ஸ்காட்லாந்திலும், கிழககு ஆங்கிலியாவிலும் வெடிகுண்டுகள் போடப்பட்டன. சிறிது சேதம் விளைவிக்கப்பட்டது. நான்கு ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. பொதுவாக, சென்றவாரம் பிரிட்டனில் அதிகமான விமானத்தாக்குதல் இல்லை. லண்டனில் விமான எச்சரிக்கை ஒலிப்பு உபயோகப் படுத்தப்படவில்லை.

சென்னை மாகாணப் பொது மக்கள் யுத்த நிதிக்கு உதவிய பணத்திலிருந்து வாங்கப்பட்ட ஆகாய விமானங்கள் அருமையான காரியங்களைச் செய்திருக்கின்றன. 'ஸ்பிட்பைர்,' 'ஹரிகேன்' என்ற இரண்டுவித விமானங்களடங்கிய சென்னைப் படை பல யுத்த அரங்கங்களில் என்னென்ன வேலைகள் செய்தன என்பதைப்பற்றிய விவரங்கள் இப்போது கிடைத்திருக்கின்றன. 'ஸ்பிட்பைர்' விமானங்கள் செய்தவற்றை முதலில் கூறலாம் :—

1940-ம் ஆண்டு இங்கிலாந்தின் மேற்கு பிரதேசத்தில் சென்னை விமானங்கள் பாதுகாக்கும் வேலையைச் செய்துவந்தன. கார்னிஷ், டெவன், டார்செட், ஹாம்ஷைர் கரையோரங்கள் வழியாகப் போகும் 'கான்வாய்' துணைக் கப்பல்களைக் கவனமாய்ப் பார்த்து வந்தன. பிரிட்டிஷ் கப்பல்களையும், நேச தேசத்தார் கப்பல்களையும் பாதுகாக்கும் வேலையில், சென்னை விமானங்கள் சிறப்பான பேர் பெறறிருக்கின்றன.

1940-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், சென்னை விமானங்கள் லண்டனைப் பாதுகாப்பதற்கு தென் கிழக்கு பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டன. இந்தப் புதிய யுத்த அரங்கத்தில் முதன் முதலாகப் பறந்து, 13 எதிரி விமானங்களை 4 நாள்களில் சுட்டு வீழ்த்தின. லண்டன் பாதுகாப்பில் சென்னை விமானங்களால் வீழ்த்தப்பட்ட ஜெர்மன் விமானங்கள் 30.

பின்பு, மேற்குப் பிரதேசத்துக்கு மீண்டும் அவைகள் அனுப்பப்பட்டன. 1940-ம் ஆண்டு நவம்பர் மீ 29உ பிரிட்டிஷ் நாசகாரிக் கப்பல் "ஜாவ்லினை" எதிரி விமானங்களின் தாக்குதலிலிருந்து பாதுகாத்தன. இது சென்னை விமானங்கள் செய்த சிறந்த காரியங்களில் ஒன்றாகும். இந்த சண்டையில் மூன்று ஜெர்மன் வெடிகுண்டு விமானங்கள் நாசமாக்கப்பட்டன ; ஒன்று பழுதாக்கப்பட்டது. சென்னை விமானங்களில் ஒன்றுகூட நஷ்டமாகவில்லை.

1940-ம் ஆண்டு செப்டெம்பர் மீ 15உ, 185 எதிரி விமானங்கள் ஒரே நாளில் நாசமாக்கப்பட்டபோது, சென்னை விமானங்கள் தெற்குக் கரையில் நடந்த சண்டையில் ஐந்து பெரிய ஜெர்மன் விமானங்களை சுட்டு வீழ்த்திவிடடன.

சென்னை "ஸ்பிட்பைர்" விமானங்கள் சாதித்த காரியங்களை மெச்சி, 6 விமானப் பதக்கங்களும் பாராட்டுச் சின்னங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன இந்தப் படையைச் சேர்ந்த ஒரு "சார்ஜண்ட்" 6 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கிறார் ; ஒரு விமான ஓட்டி 14 விமானங்களை நாசமாக்கியிருக்கிறார்.

சென்னை "ஹரிகேன்" விமானங்கள் செய்த அருமையான காரியங்களை அடுத்தபடியாகக் கவனிக்கலாம் :—

1939-ம் ஆண்டு அக்டோபர் மீ கெண்ட் கரையோரத்தைப் பாதுகாத்து வந்த சென்னை "ஹரிகேன்" விமானங்களில் மூன்று ஒரு எதிரி விமானத்தைக் ண்டு, துரத்திக்கொண்டுபோய் அதைச் சுட்டு டோவர் ஜலசந்தி பிரதேசத்தில் வீழ்த்தி விட்டன. இதுதான் முதல் வெற்றி. இதற்குப் பிறகு பிரிட்டனை பாதுகாக்கும் வேலையில், பிரான்சின்மேல் பறந்து 65 எதிரி விமானங்களை, சென்னை "ஹரிகேன்" படை அழித்திருக்கிறது. ஹிட்லர் ஹலந்தைத் தாக்கியபோது, இந்தப் படை பிரான்சில் இருந்தது. அப்போது 10 நாள்களில் 25 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தியது ; இன்னும் அநேக விமானங்களைப் பழுதாக்கிவிட்டது ; பிரிட்டனுக்கு வருவதற்குமுன் கடைசி நாளில் 10 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன.

பிரிட்டனில் வடகிழக்குக் கரையோரத்தின் ஒரு பாகத்தை, சென்னை "ஹரிகேன்" படை பாதுகாக்கும்படி விடப்பட்டது. ஆகஸ்ட்டு மாதத்தில் பெரும் விமானப் போர் தொடங்கியபோது தெற்குக்கரை முன்னணிக்கு அனுப்பப்பட்டது. ஆகஸ்ட்டு மாதம் 15-ந் தேதி, கெண்ட் ஆகாய விமானச்சாலையை எதிரி விமானங்கள் தாக்கியபோது, 5 எதிரி விமானங்களை, சென்னைப் படை சுட்டு வீழ்த்தியது ; அடுதத நாளும் ஐந்து எதிரி விமானங்கள் வீழ்த்தப்பட்டன.

சென்ற வருஷம் செப்டெம்பர் மாதம், லிவர்பூல் நகரத்தைப் பகலில் தாக்குவதற்காக வந்த ஜெர்மன் விமானப் படையை, சென்னைப் படை வழியில் தடுத்து, போர்புரிந்து, துரத்தியடித்துவிட்டது. ஒரு எதிரி விமானம் வீழ்த்தப்பட்டது. இது சென்னை "ஹரிகேன்" படை சாதித்த ஒரு சிறந்த காரியம். சமீப காலங்களில் இரவில் வந்து தாக்கும் ஜெர்மன் விமானங்களோடு, சென்னைப் படை போர்புரிந்திருக்கிறது. மார்ச்சு மாதம் ஒரு இரவு தெற்கு வேல்ஸ் பிரதேசத்தில் ஒரு ஜெர்மன் விமானம் சுடட வீழ்த்தப்படடது.

இந்தப் படையைச் சேர்ந்தவர்களுக்கு 5 பாராட்டுப் பதக்கங்களும், சின்னங்களும் அளிக்கப்பட்டன. ஒரு "லெப்டினண்ட்" படையின் தலைவராக இருந்து, ஆறு எதிரி விமானங்களோடு தனியாகப் போராடினார். ஒரு விமானத்தை சுட்டு வீழ்த்தி, மற்றொரு விமானத்தைப் பழுதாகும்படி செய்தார். அடுத்த நாள் வேறொரு எதிரி விமானத்தைச் சுட்டு வீழ்த்தினார்.

சென்னை "ஹரிகேன்" படையைச் சேர்ந்த ஒரு விமான ஓட்டி 5 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கிறார். இந்த சண்டைகளில் ஒன்றில், ஆகாயத்திலேயே இவர் எட்டு மணி நேரம் தொடர்ந்து இருந்தார்.

### 2. ஆப்பிரிக்காவும், மத்தியதரைக்கடலும்.

சோலும் பிரதேசத்தில் நடக்கும் யுத்தத்தில், பிரிட்டிஷார் முன்பு இருந்த இடங்களுக்கு மீண்டும் வந்து விட்டார்கள். மூன்று நாள் மும்முரமாக நடந்த சண்டையில், ஜெர்மன் துருப்புகளுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டது. மத்தியானம் 12-மணிக்கு 131 டிகிரி வெப்பம் இருந்தது ; டாங்கிகளிலிருந்து வேலை செய்தவர்கள் இன்னும் அதிகமான வெப்பத்தினால் மிகுந்த கஷ்டப்படவேண்டியதாயிருந்தது. இந்த விஷயங்களை, ஜெர்மன் உத்தியோக சமாச்சார ஸ்தாபனம் உண்மை என்று ஒப்புக்கொள்கிறது.

அபிசீனியாவில், லெகெம்டி என்ற இடத்துக்கு மேற்கில் 15 மைல் தூரத்திலுள்ள எதிரிகளின் ஸ்தானம் பிடிக்கப்பட்டது. எதிரிகளில் 160 பேர் உயிரிழந்தார்கள். 150 பேர் கைதிகளாகப் பிடிக்கப் பட்டார்கள். நான்கு பெரிய பீரங்கிகளும், 20 யந்திர பீரங்கிகளும் கைப்பற்றப்பட்டன.

எகிப்து ஏராளமான வெட்டுக்கிளிகளால் படையெடுக்கப்பட்டது. கிழக்குப் பாலைவனத்திலிருந்து, அஸ்வான், சீனா, முதலிய இடங்களிலிருந்து அவ் வெட்டுக்கிளிகள் வந்தன. விவசாய அரசாங்கத்தார் வெட்டுக்கிளி தொந்தரவை அடக்குவதற்காக அநேக உத்தியோகஸ்தர்களைக் கூட்டம் கூட்டமாக அனுப்பியிருக்கிறார்கள்.

மேற்குப் பாலைவனத்தில் நடந்த பெரும் 'டாங்கி' சண்டை ஏறக்குறைய முடிந்து விட்டதென்று சொல்லலாம். இந்த யுத்த அரங்கத்தில் நேசதேசத்தாரின் பலத்தின் வளர்ச்சியை ஜெர்மானியர்கள் அனுபவபூர்வமாக அறிந்துகொண்டார்கள். மேற்குப் பாலைவன யுத்தத்தில் இந்தியத் துருப்புகள் மெச்சத் தகுந்த மாதிரி முன்னேறிச் சென்ற விவரங்கள் சென்ற வாரத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இராத்திரி நேரங்களில் 140 மைல் அத் துருப்புகள் நடந்து சென்றிருக்கின்றன. பகலில், பகைவர்களின் வேவுகாரர்களின் கண்களில் அகப்படாமல் ஒளிந்துகொண்டே சென்று, அடுத்த இரவு வரும் வரைக்கும், கோடைகாலத்து வெய்யிலின் உக்கிரத்தைப் பொறுத்துக்கொண்டு இந்தியத் துருப்புகள் முன்னேறிச் சென்றன. பாலஸ்தீனத்திலும், மேற்குப் பாலைவனத்திலும் அவைகள் போர்செய்துவிட்டு அபிசீனியவில் அருமையான வேலைசெய்து, தேசிபிரதசத்தில் தேப்ராடபரை நோக்கிச்சென்றுகொண்டிருக்கின்றன.

பென்காசி துறைமுகம் பிரிட்டிஷ் ஆகாய விமானங்களால் தாக்கப்பட்டது. துறைமுகத்திலுள்ள கப்பல்களின் மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன. துறைமுகக் கட்டடங்கள் இடிந்து விழுந்தன; பல இடங்களில் நெருப்புப்பிடித்துக்கொண்டது.

மேற்குப் பாலைவன யுத்தத்தில் ஒரு முக்கியமான அம்சம் முதலிலிருந்து இதுவரைக்கும் பிரிட்டிஷ் விமானப்படை எதிரிகளைவிட பலம் பொருந்தியது என்பது தான் என்று ராய்டர் ராணுவ நிருபர் கூறுகிறார்.

அனுபவம் பெற்ற ஒரு பிரிட்டிஷ் ராணுவ அதிகாரியை, ராய்டர் நிருபர் இதன் காரணத்தைப் பற்றியும், பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் பெற்ற சிறப்பான வெற்றிகளைப்பற்றியும் கேட்டார். "உட்கார்ந்திருக்கும் பறவையைச் சுடுவதுதான். தரையிலிருந்து மேலே கிளம்புவதற்கு அப் பறவைகளுக்கு நாங்கள் இடம் கொடுப்பதில்லை," என்று அவர் பதிலளித்தார். அதாவது, எதிரிகளின் ஆகாய விமானங்கள் தரையிலிருக்கும்பொழுதே, பிரிட்டிஷ் விமானங்கள் அவைகளின் மேல் வெடிகுண்டுகளைப் போட்டு நாசமாக்கி விடுகின்றன.

அபிசீனியாவில் ஜிம்மா என்ற பட்டணம் இத்தாலியர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது. 8,000 இத்தாலியர்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். சோடு என்ற இடத்திலுள்ள இத்தாலியர்கள் சரணகதியடைந்தார்கள். ஜிம்மாவைத் தாண்டி துருப்புகள் முன்னேறிச் செல்கின்றன. அலெக்சாண்டிரியாவில் எதிரி விமானங்கள் வெடிகுண்டுகளையும், அக்னி குண்டுகளையும் போட்டன. 20 பேர் இறந்து போனார்கள், 60 பேருக்கு காயம் ஏற்பட்டது கொஞ்சம் பொருள் சேதமும் உண்டாயிற்று.

பிரெஞ்சு ரோமாலிலாந்து பிரதேசம் சுதந்தர பிரெஞ்சுக்காரர்களுடன் சேரவேண்டும்; அல்லது அச்சுக்கொள்கையில் சம்பந்தப்படாமல் விலகிக் கொள்ளவேண்டும்—என்று ஜெனரல் வேவல் ஜீபுதி கவர்னருக்கு ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார். விஷி அரசாங்கம் பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும், இதைக் குறித்துத் தன்னுடைய ஆட்சேபனையைத் தெரியப்படுத்துகிறது.

மத்தியதரைக்கடலிலுள்ள மால்டா தீவின் கவர்னருக்கு, பிரிட்டிஷ் அரசரின் சார்பாக ஒரு பாராட்டுச் செய்தி அனுப்பப்பட்டது. அதில், மால்டா தைரியத்துடனும், உறுதியுடனும், யுத்தத்தில் நிற்பதை அரசர் பாராட்டுவதாக, குடியேற்ற நாட்டு மந்திரி தெரியப்படுத்தியிருக்கிறார்.

வடக்காப்பிரிக்காவிலிருந்து போன 1,000 இத்தாலியக் கைதிகள், ஒரு தென்னாபிரிக்க துறைமுகத்தில் இறக்கப்பட்டார்கள். இவர்களைச் சேர்த்து ஆப்பிரிக்காவில் உள்ள மொத்த இத்தாலியக் கைதிகள் 20,000. இவர்களல்லாமல், ஜெர்மன் கப்பற்படையைச் சேர்ந்த 63 பேர், படை உத்தியோகஸ்தர்களும், இதரர்களும், அதே இடத்தில் இறக்கப்பட்டிருக்கிறார்கள்; பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் "கார்ன்வால்," இந்திய சமுத்திரத்தில் ஒரு ஜெர்மன் கப்பலை முழுகடித்தபோது இவர்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். தென்னாப்பிரிக்காவில் இந்த ஜெர்மன் கைதிகள் தான் முதன் முதலில் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள்.

மத்தியதரைக்கடலிலுள்ள சிசிலியின் துறைமுகத்தின் மேல் பிரிடடிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. சீரகியூஸ் என்ற அந்தத் துறைமுகத்தில் இருந்த கப்பல்கள், படகுகள், துறைமுகக் கட்டடங்கள் முதலியவைகளின் மேல் வெடி குண்டுகள் நேராகப் போடப்பட்டன.

ஆப்பிரிக்காவிலுள்ள சூடான் அரசாங்கத்தார் இந்தியத் துருப்புகளின் போர்த் திறமையைப் பாராட்டி சூடானைப் பாதுகாத்து இத்தாலியர்களை விரட்டியடித்ததைப் புகழ்ந்து, தங்களுடைய நன்றியறிதலைக் காண்பிப்பதற்காக, இந்திய வைஸ்ராய் லார்டு லின்லித்கோவுக்கு ஒரு லட்சம் பவுன் அனுப்பியிருக்கிறார்கள். இந்தத் தொகை இந்தியாவின் யுத்த முயற்சிக்காகக் கொடுக்கப்பட்டது.

### 3. அமெரிக்காவும், அட்லாண்டிக்கடலும்.

அமெரிக்காவில் உள்ள இத்தாலியர்களும், ஜெர்மானியர்களும், நாட்டைவிட்டு வெளியே செல்லக் கூடாதென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் பாதுகாப்புக்காகவேண்டிய கடற்படை, ராணுவ சாமான்கள், யந்திரக்கருவிகள், விமானங்கள் முதலியவைகளைக் கைப்பற்றுவதற்கு பிரசிடெண்டுக்கு வேண்டிய அதிகாரம் கொடுப்பதற்காக யுத்த இலாகா ஒரு மசோதாவை அமெரிக்க சட்டசபைக்கு அனுப்பியிருக்கிறது. இந்த மசோதா சீக்கிரம் சட்டமாக வேண்டுமென்று யுத்த உதவி மந்திரி மிஸ்டர் பாடர்சனும், கப்பல் கமிட்டித்தலைவர் அட்மிரல் லாண்டும் செனட் ராணுவக் கமிட்டியின் முன் கூறினார்கள். இன்னின்ன சாமான்களைத் தான் பிரசிடெண்டு கைப்பற்றலாம் என்ற விவரங்கள் மசோதாவில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மசோதா சீக்கிரம் சட்டமானால் அதிகமான கப்பல்களும், அதிவேகமான கப்பல்களும் சீக்கிரத்தில் தயார் செய்வதாக அட்மிரல் லாண்டு வாக்களித்தார்.

பசிபிக் மகா சமுத்திர வியாபாரத்தை அமெரிக்கக் கப்பல்கள் மேற்கொண்டால் வியாபார வேலை செய்துவரும் பிரிட்டிஷ் கப்பல்கள் யுத்தத்திற்கு உபயோகப்படும் என்ற யோசனையை நியூஜிலாந்து ஆக்டிங் முதல் மந்திரி மிஸ்டர் நாஷ், ஆதரித்திருக்கிறார்.

அமெரிக்காவுக்குச் சென்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்டிடம் கலந்துபேசிய அமெரிக்க ஸ்தானீகர் மிஸ்டர் வினாண்டு, ஒரு அமெரிக்க வெடிகுண்டு விமானத்தில் அட்லாண்டிக் கடலைத்தாண்டி பிரிட்டனுக்கு வந்து சேர்ந்தார்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை அபூர்வமாக லார்டு ஹாலிபாக்ஸ் (பிரிட்டிஷ் ஸ்தானீகர்) மிஸ்டர் சம்னர் வெல்சிடம் (அமெரிக்க அரசியல் மந்திரி) போய் இரண்டு மணி நேரம் பேசினார்.

தூரக்கிழக்கரங்கத்திலிருந்து தனிப்பட்ட நபர்கள் ரப்பரைத் தருவிப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறதென்று அமெரிக்க அரசாங்கத்தார் உத்தரவிட்டிருக்கிறார்கள். அடுத்த ஆறு மாதத்திற்கு ராணுவ சம்பந்தமில்லாதவர்கள் உபயோகப்படுத்தும் ரப்பர் 100-க்கு 20 வீதம் குறைக்கப்பட்டிருக்கிறது. தூரக்கிழக்கரங்கத்திலிருந்து வரும் எல்லா ரப்பரையும் அமெரிக்க அரசாங்கத்தாரே வாங்கப் போகிறார்கள். பாதுகாப்பு சம்பந்தமாகவும் வர்த்தக சம்பந்தமாகவும் உபயோகப்படும் ரப்பரை அரசாங்கத்தார் பிரித்துக்கொடுப்பார்கள்.

மோட்டார் வண்டி வைத்திருப்பவர்கள் அவசியமில்லாத அளவுக்கு 'டையர்' (சக்கர ரப்பர்) வாங்காமலிருக்கும்படி கேட்டுக்கொள்வதாக அமெரிக்க விலை நிர்வாக அதிகாரி ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

அமெரிக்காவிலிருந்து பிரிட்டன் எகிப்து தவிர வெளி நாடுகளுக்குப் 'பெட்ரோல்' அனுப்பக்கூடாதென்று தடை யுத்தரவுபோட்டதனால் ஜப்பானுடைய யுத்த நிலைமை பாதிக்கப்பட்டிருப்பதாக ஜப்பானிய மந்திரி மிஸ்டர் எமகாதா கூறினர். சீன யுத்தம் தொடர்ந்து நடைபெற வேண்டுமானல் 'பெட்ரோல்' வசதி அவசியம் வேண்டுமென்றும் அமெரிக்காவிடம் ஜப்பான் சமாதானமாக இருக்க விரும்புகிறதென்றும், ஆனல் இந்தத் தடை யுத்தரவு அந்த மனப்பான்மையைக் கலைக்கிறதென்றும், அவர் சொன்னர்.

அமெரிக்காவிலுள்ள ஜெர்மன் ஸ்தானீகர் காரியாலயங்கள் மூடிவிடும்படி உத்த விடப்பட்டதால் அச்சு நாடுகளில் இருக்கும் அமெரிக்க ஸ்தானீகர் காரியாலயங்களை மூடிவிடும்படி ஜெர்மனியும், இத்தாலியும் உத்தரவிட்டிருக்கின்றன.

"ராபின் மூர்" என்ற அமெரிக்க வியாபாரக் கப்பலை ஒரு ஜெர்மன் 'சப்மரீன்' தாக்கி முழுகடித்ததை பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் வன்மையாகக் கண்டித்திருக்கிறர்.

அமெரிக்கா கடல் கடந்து சண்டை செய்வதாயிருந்தால், பொதுமக்களின் அபிப்பிராயத்தைக் கேட்க வேண்டியது அவசியமா - என்ற 'காலப்' கேள்விக்கு 100-க்கு 50 பேர் கேட்கவேண்டுமென்றும், 44 பேர் வேண்டாமென்றும், 6 பேர் இரண்டும் சொல்லாமலும் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள்.

வெளிநாட்டுப்பணம் அமெரிக்காவில் உறைந்து போய்விட்டதென்ற உத்தரவு சில நாடுகளுக்கு விலக்கப்பட்டிருக்கின்றன. போர்ச்சுகல், ருஷ்யா, பின்லாந்து, ஸ்பயின், ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகள் இம்மாதிரி விலக்கப்பட்டவை.

அமெரிக்கர்கள் பிரிட்டிஷ் படைகளில் சேருவதைப் பற்றி யாதொரு ஆட்சேபணையும் இல்லை என்றும், ராணுவ சம்பந்தமில்லாத யுத்த வேலைகளில் அமெரிக்கர்கள் அதிகமாகச் சேர்ந்து பிரிட்டனுக்கு உதவி செய்வதைத்தான் வரவேற்பதாகவும், பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் கூறினர்.

### 4. கிரீசும், இத்தாலியும்.

கிரீசில் நடந்த யுத்தத்தில், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய துருப்புகளில் அநேகர் எதிரிகளிடம் கைதியானர்கள். பிரிட்டிஷ், ஆஸ்திரேலியன், நியூஜிலாந்து துருப்புகளில், கிரீசில் இப்போது கைதியாயிருப்பவர்கள் மொத்தம் 9,000 என்று ஆஸ்திரேலிய யுத்த மந்திரி, மிஸ்டர் ஸ்பெண்டர், சட்ட சபையில் தெரிவித்தார். கிரீசுக்கும், கிரீட்டுக்கும் சென்று திரும்பி வராத ஆஸ்திரேலியர்கள் 5,951 என்று அவர் கூறினர்.

இத்தாலியில் உள்ள முசலோனியின் பாஸிஸ்டு கட்சிக்கு, ஸ்டாரேஸ், என்பவர் காரியதரிசியாயிருந்தார். பாஸிஸ்டு கட்சிக்குச் சம்பந்தப்பட்ட 'சேம்பர் அப் பாஸி அண் கார்பொரேஷன்ஸ்' என்ற ஸ்தாபனத்தின் அங்கத்தினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவருக்குப்பதிலாக. லெப்டினண்ட்-ஜெனரல் என்சோ கல்பியாடி நியமிக்கப்பட்டிருக்கிறர். பாஸிஸ்டு படையின் தலைவராக ஸ்டாரேஸ் இருந்தார்; அந்தப் பதவி கல்பியாடிக்குக் கொடுக்கப்பட்டது.

### 5. பால்கன்ஸ், துருக்கி, இராக், சிரியா முதலியன.

சிரியாவின் தலை நகரமான டமாஸ்கஸ் நேச தேசத்தாரால், கடுமையான போருக்குப்பிறகு, பிடிக்கப்பட்டது. இரண்டு இந்திய காலாட் படைகள் காட்டிய வீரமும், தியாகமும்தான் டமாஸ்கஸ் பிடிபடுவதற்குப் பெரிதும் உதவியாயிருந்தது. இவைகளுடைய உதவியினல், சுதந்தர பிரஞ்சு படைகள், விஷித் துருப்புகளின் பாதுகாப்பை உடைத்துவிட்டு சிரியாவின் தலை நகரத்தைக் கைப்பற்றிக்கொண்டன.

இந்த இரண்டு இந்தியப்படைகள் இதற்குமுன் கிஸ்வி என்ற இடத்தைப் பிடிப்பதற்கு உதவியாயிருந்தன. இவைகள் டமாஸ்கஸ் நகரத்திற்கு வெளிப்புறத்திலுள்ள மெஸ்ஸி என்ற கிராமத்தை சென்ற வியாழக்கிழமை (ஜூன் 19ஃ) காலை கைப்பற்றின. விஷித் துருப்புகள் 'டாங்கி'களையும், பெரிய பீரங்கிகளையும் அனுப்பி, இந்தியத் துருப்புகள் முன்னேறி வருவதைத் தடை செய்ய முயற்சித்தன. பலமான தாக்குதல் நடைபெற்றது. இந்தியத் துருப்புகள் தங்கி இருந்த வீடுகள் பீரங்கிகளால் சுட்டுத் தகர்க்கப்பட்டன. முடிவில் சிலர் சரணகதியடைய நேரிட்டது. ஆனல் அவர்கள் செய்த போர், டமாஸ்கஸ் கதவு திறக்கப்படுவதற்கு வழி ஏற்படுத்தியது; விஷித் துருப்புகள் டமாஸ்கஸை விட்டுவிட்டுப் பின்வாங்கிச் செல்வதற்கு உதவியாயிருந்தது. எப்படி என்றல், இந்தியத் துருப்புகள் விஷித்துருப்புகளோடு போர் செய்து கொண்டிருக்கும் போது, சுதந்திர பிரஞ்சுத் துருப்புகள் வேறு வழியாக டமாஸ்கஸை தாக்கிப் பிடித்துக்கொண்டன.

இந்தியத் துருப்புகளுடன் லெப்டினண்டு-கர்னல் டெஸ்மாண்ட் யங் என்பவர் கூட இருந்தார். அவர் முன்பு இந்திய அரசாங்கத்தின் பிரதம பத்திரிகாலோசனையாளராக இருந்தவர் விஷித் துருப்புகள் திருப்பித் தாக்கியபோது, அவரைக் கைதியாகப் பிடித்துக்கொண்டார்கள். பின்பு அவர் சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு, நேச தேசத் துருப்புகள் டமாஸ்கஸில் பிரவேசிக்கும்போது, அவைகளை வரவேற்றர். சிரியாவின் தலைநகரத்தைப் பிடித்த விவரங்களை அவர் தந்தி மூலம் அனுப்பியிருக்கிறர். அதன் சுருக்கம் பின்வருமாறு :—


சிரியாவைத்தாக்க ஆரம்பித்த காலம் முதற்கொண்டு, இரண்டு இந்தியப்படைகள் ஈட்டி முனையைப்போல் தாக்குதலின் தலைமை ஸ்தானத்தில் இருந்தன. டமாஸ்கஸை நோக்கி முன்னேறிச் சென்றபோது, டேரா, ஷேக் மிஸ்கின், சானிமீன், கிஸ்வி, ஆகிய இடங்கள் இந்தியப் படைகளால் பிடிக்கப்பட்டன. முதல் இரண்டு இடங்களும், கடைசி இடமும், கடுமையான சண்டைக்குப் பிறகுதான் கைப்பற்றப்பட்டன. ஒரு இரவில் சாமர்த்தியமான போர் செய்ததின் பயனக, கிஸ்வி என்ற இடம் நம்முடைய துருப்புகளால் பிடிக்கப்பட்டது. கிஸ்வியைப் பிடித்ததும், உடனே அடுத்த வேலை இந்தியத் துருப்புகளுக்குக் கொடுக்கப்பட்டது. அந்த வேலை கஷ்டமானதும், சிக்கலானதுமான வேலை; ஏனென்றல், அப்போது தான் இந்தியத் துருப்புகளுக்கு இடது பக்கம் போர் புரிந்துகொண்டிருந்த பிரிட்டிஷ் படை, கடுமையான போர் புரிந்து, கடைசியில் குனீத்ரா என்ற இடத்தில் எதிரிகளிடம் சரணகதியடைய நேர்ந்தது; இதனல் இந்தியப்படைகளின் இடது பக்கம் தக்க ஆதரவான பலம் இல்லை. அந்தப் பக்கத்திலிருந்து எதிரிகள் தாக்கும்படியான நிலைமையில் இருந்தது. இருந்தபோதிலும், இந்தியப் படைகளின் தலைவர், தாக்குதல்தான் தற்பாதுகாப்புக்குச் சிறந்த வழி என்ற முறையின் படி, தைரியமாக டமாஸ்கஸை நோக்கி தன்னுடைய படைகளைக்கொண்டு சென்றர்.

டமாஸ்கஸ் குதிரை லாடம்போன்ற மலைப்பிராந்தங்களுக்கு மேல் இருக்கிறது. குனீத்ரா, டமாஸ்கஸ் ரோட்டுக்கு வலது பக்கத்தில் காடுகள் நிறைந்த கிராமங்களாகிய ஆர்தூஸ், ஜூடிடி ஆர்தூஸ், மவுத்தமியா இருக்கின்றன. ஆர்தூஸ் நம்மவர்களால் முன்பே பிடிக்கப்பட்டது. மவுத்தமியா என்ற இடத்தைக் கைப்பற்ற சுதந்தர பிரெஞ்சுத்துருப்புகள் ஒருநாள் பகலில் தாக்கின. ஆனல் விஷித்துருப்புகள் அவைகளைத் திருப்பித் தாக்கி முறியடித்துவிட்டன. இதனல், மெஸ்ஸி என்ற இடத்தை இரவில் பிடிக்கும் வேலை இந்தியத்துருப்புகளுக்குக் கொடுக்கப்பட்டது. மவுத்தமியாவுக்கும், மெஸ்ஸிக்கும் இடையில் 6 மைல் தூரம் இருந்தது. இரண்டுக்கும் மத்தியில் ஒரு ஆகாய விமானச்சாலை இருந்தது. மெஸ்ஸியைப் பிடிக்க வேண்டுமென்றல், மவுத்தமியாவைப் பிடித்துவிட்டு, ஆகாய விமானச்சாலையைக் கைப்பற்றி, மெஸ்ஸிக்கு வெளியில் உள்ள கம்பிகளால் வளைத்துக்கட்டப்பட்ட முகாமை தம்வசப்படுத்திக்கொண்டு, பீரட் ரோட்டுக்கு அருகில் இருக்கும் மலையில் மேலேறி, மலை மேலிருக்கும் கோட்டையைப் பிடிக்கவேண்டும்.

இந்த அபாரமான காரியத்தை எப்படிச் செய்வது? போரிட்டுக் களைத்த இந்திய துருப்புகள் 12 மைல் நடந்து சென்று, வழியில் தங்களை எதிர்த்துவரும் பகைவர்களை விரட்டிவிட்டு, கடைசியில் கோட்டையைத் தாக்கி அதை கைப்பற்றவேண்டும். அன்றைய இரவு 11-மணி இருக்கும்; நாங்கள் பின்னலிருக்கும் மலையிலிருந்து தூரத்தில் விளக்கு வெளிச்சம்

# யுத்தத்தில் ஜெயிப்பதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக வேலை செய்கின்றன.

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய ஆகாய விமானப்படையைச் சேர்ந்தவர்கள், பயிற்சி முடிவடைந்த பிறகு, ஆஸ்ட்ரேலியாவிலிருந்து கனடாவுக்குக் கப்பலேறும் காட்சி.



இவ்வித ஏற்பாடுகளினுல் கூடிய சீக்கிரத்தில் பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை மிகவும் பலம் வாய்ந்ததாய் விடும்.

---

நிறைந்த டமாஸ்கஸ் நகரைப் பார்த்தோம். ஆனுல் எங்களுடைய கவனம் மவுத்தமியா காட்டில் இருந்தது. 11 அடித்து 5 நிமிஷங்களுக்குப் பிறகு யந்திர பீரங்கிகளின் சப்தம் கேட்டது. பின்பு அது அதிகரித்தது. அதன்பின் நிசப்தமாய் இருந்தது. இந்தியத்துருப்புகள் மவுத்தமியாவின் பாதகாப்பை உடைத்துவிட்டு, டமாஸ்கஸை நோக்கி முன்னேறிச்சென்றுவிட்டாரென்று அறிந்தோம்.

மறுபடியும் பீரங்கிச்சப்தம் கேட்டது. ஆகாய விமானச்சாலைக்குச் சென்ருர்களென்று அறிந்தோம். இதற்குள் மெஸ்ஸைப் பாதுகாத்தவர்கள் விழித்துக்கொண்டு தயாராக இருந்திருக்கவேண்டும்; அங்கு ஒரு பெரும் போர் நடந்தது. மணிக்கணக்காக நின்று தூரத்தில் நடக்கும் சண்டையின் போக்கைக் கவனித்துக்கொண்டு வந்தோம் நாங்கள் நடந்துவந்த இளைப்பால் மிகவும் களைத்திருந்தோம். எங்களுக்கே அப்படி இருந்தபோது, முன்னேறிச் சென்ற இந்திய துருப்புகள் இன்னும் அதிகமாகக் களைத்திருக்கவேண்டும். ஆனுல் காலை 5-15 மணிக்கு அவர்கள் வெற்றியடைந்ததாக முழக்கம் செய்தார்கள். நாங்கள் ஏறியிருந்த மலையில் பொழுது விடிந்துவிட்டது; ஆனுல் கீழே பள்ளத்தாக்கில் இருட்டாயிருந்தது; வெடிகுண்டுகள் வெடிப்பது இருட்டில் மஞ்சள் வெளிச்சங்களாகத் தோன்றியது.

பின்னுல் நடந்த சமாச்சாரத்தைப் பிறகு சில இந்திய ராணுவ உத்தியோகஸ்தர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன்; அவர்கள் என்னுடன் கூட டமாஸ்கஸில் கைதிகளாய் இருந்தார்கள். மவுத்தமியாவையும், ஆகாய விமானச்சலையும் இந்தியத் துருப்புகள் கஷ்டமில்லாமல் பிடித்துவிட்டன; ஆனுல் மெஸ்ஸியிடம் பலத்த எதிர்ப்பு இருந்தது. கடுமையான போராட்டம் நடைபெற்றது. துருப்புகளுக்குத் தலைமை ஸ்தானமாகக் கொண்ட ஒரு பெரிய வீடு பலமாகத் தாக்கப்பட்டது. வீடு நிறைய காயப்பட்டவர்கள் அதிகமாய் இருந்தார்கள். கடைசியில் ஒரு வெண்கொடியைக் காட்டவேண்டியதாய் விட்டது.

இந்தியத்துருப்புகளின் கொடிய சண்டையும், காட்டிய வீரமும், தியாகமும், எதிரிகள் வலது பக்கத்தில் காட்டவேண்டிய கவனத்தை இடதுபக்கத்தில் காட்டும்படி கட்டாயப்படுத்தியது. எதிரிகளுடைய 'டாங்கி'களும், கோட்டையிலுள்ள பெரிய பீரங்கிகளும் இந்தியர்களோடு நடந்த சண்டைக்காகக் கொண்டுவரப்பட்டன. அதனுல், வலதுபக்கத்தில், கிஸ்வியிலிருந்து முன்னேறி டமாஸ்கஸைத் தாக்கிய சுதந்தர பிரெஞ்சு படைகளின் வேலை சௌகரியமாய் விட்டது. அவைகள் டமாஸ்கஸைப் பிடித்துவிட்டன. இந்தியத்துருப்புகளின் தைரியம்தான் டமாஸ்கஸைப் பிடிப்பதற்கு மிகுந்த உதவிசெய்தது."

மேலே குறிப்பிட்ட விவரங்கள் மிஸ்டர் டெஸ்மாண்டு யங் என்ற பிரிட்டிஷ் ஆபீசர் அனுப்பிய அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டன.

இராக்–பாலஸ்தீன் வழி திறக்கப்பட்டது; போக்குவரத்து சாதனங்கள் அவ்வழியைத் தாராளமாக உபயோகித்து வருகின்றன. ஏராளமான மோட்டார் வண்டிகள் பஸ்ராவிலிருந்து, பாக்தாத் வழியாக, பாலஸ்தீனத்துக்குப் போய்க்கொண்டிருக்கின்றன.

புதிதாக ஏற்படுத்தப்பட்ட குரோஷியாவைப்பற்றி, யூகோஸ்லாவியாவில் முன்பு இருந்த பிரிட்டிஷ் ஸ்தானீகர், தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிருர். அதை ஒரு விளையாட்டான விஷயமென்றும், அதற்குக் காரணமாயிருந்த பாவலீச் என்பவரைப் பின்பற்றுபவர்கள் மிகக் கொஞ்சமென்றும் அவர் கூறினுர்.

துருக்கி ஜெர்மனியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டாலும், பிரிட்டனுடு செய்த ஒப்பந்தத்தைக் காப்பாற்றுமென்று துருக்கி வாக்குறுதியளித்திருக்கிறது.

துருக்கி இத்தாலியுடன் ஒரு பொருளாதார ஒப்பந்தம் செய்துகொள்ளும் என்று தெரிகிறது.

## 6. கப்பல் நிலைமை.

எதிரிகளுடைய கப்பல்கள், ஜூன் 15-ம்தேதியோடு முடிவானவாரத்தில், முழுகடிக்கப்பட்ட கணக்கு வரங்கள் சென்றவாரத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் கடற்படையும். விமானப்படையும், எதிரிகளின் கப்பல்களை 40 தடவைக்குமேல் தாக்கியிருக்கிறது. குறைந்தபட்சம், 28 கப்பல்கள் பிரயோசனப்படாத அளவுக்கு நாசமாக்கப்பட்டன. 14 கப்பல்கள் முழுகடிக்கப்பட்டன.

மே மாதத்தில் முழுகடிக்கப்பட்ட நேசதேசத்தார்கள் கப்பல்கள் 98; அவைகளின் எடை 461,3 8 டன். இந்த மாதத்தில். ஜெர்மானியர்கள் 805,460 டன் வர்த்தகக்கப்பல்களை முழுகடித்ததாகவும், இத்தாலியர்கள் 56,000 டன் கப்பல்களை முழுகடித்ததாகவும் கூறுகிருர்கள். அவர்களுடைய கணக்கு

மொத்தம் 861,460 டன். இது உண்மையல்ல. உண்மையான கணக்கு இங்கே காட்டப்பட்டிருக்கிறது.

ஜூன்மீ 10-ந் தேதி வரைக்கும், எதிரிகளின் கப்பல்கள் நாசமான விவரம் பின்வருமாறு, ஜெர்மனி 1,888,000 டன்; இத்தாலி 1,239,000.

கப்பல் நிலைமையைப்பற்றி மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையின் இரகசியக்கூட்டத்தில் விரிவாகப் பேசினர்.

### 7. தூரக்கிழக்கு அரங்கம்.

சீன தேசப்படை ஜப்பானுடன் இன்னும் 3 அல்லது 5 வருஷம் போராடுவதற்குத் தயாராயிருக்கிறது என்று சீன தளகர்த்தர் ஜெனரல் பாய் சுங் ஹ கூறினர்.

ஜப்பானிய யுத்தக்கப்பல்கள் 58, விமானந் தாங்கும் கப்பல் 1, சில சப்மரீன்கள், இவைகளெல்லாம் அமாய் என்ற இடத்துக்கருகில் போகக் காண்டிருப்பதை அமெரிக்கக் கப்பல், 'பிரிசிடெண்ட் காலிட்ஜ்' ஜி போய்க்கொண்டிருந்த அமெரிக்க பிரயாணிகள் பார்த்தார்கள்.

சீன-ஜப்பான் யுத்தத்தில், இச்சாய் என்ற இடத்தில் 19 ஜப்பானிய விமானங்கள் போர்செய்துவிட்டு, திரும்பிவந்து இங்கியவுடன் சமீபத்தில் மலைகளில் ஒளித்து வைக்கப்பட்ட சீன பீரங்கிகள் இடைவிடாது சுட்டு, அவைகளெல்லாம் நாசமாக்கிவிட்டன.

துருப்புகளைத் தாங்கிச்சென்ற ஒரு ஜப்பானிய ரயில் வண்டித் தொடர் ஷான்சி மாகாணத்தில் தகர்க்கப்பட்டு உடைந்து விழுந்தது. வெடிகுண்டு மருந்து ரகசியமாக வைக்கப்பட்டு ரயில் வந்ததும் தீவைக்கப்பட்டதால் இந்த சம்பவம் நேர்ந்தது. உயிரிழந்தவர்களும், காயப்பட்டவர்களும் 100 ஜப்பானியர்களுக்கு அதிகமாயிருக்கும் என்று சொல்லப்படுகிறது.

### 8. விஷி.

விஷி அரசாங்கத்தின் முதல் மந்திரியான மார்ஷல் பீத்தானுக்கும், அட்மிரல்தார்லானுக்கும் அபிப்பிராயபேதம் இருப்பதாக சுயேச்சை பிரெஞ்சு செய்தி ஸ்தாபனம் கூறுகிறது. தன்னை அப்புறப்படுத்தி விட்டு அட்மிரல் தார்லான் முதல் மந்திரி பதவி வகிப்பதற்கு ஆசைப்படுவதாக, மார்ஷல் பீத்தன் அவர்மேல் சந்தேகப்படுகிறதாகத் தெரிகிறது. பல அரசாங்க காரியாலயங்களிலும், மந்திரி சபை ஸ்தாபனங்களிலும், மார்ஷல் பீத்தானுடைய படத்துக்குப்பதிலாக அட்மிரல் தார்லானுடைய படம் வைக்கப்பட்டிருக்கிறதாம்.

### 9. அச்சு ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

ஹாலந்து நாட்டு மக்கள் ஜெர்மனியர்களைச் சாத்வீகமாக எதிர்த்து வருகிறார்களென்று, ஹாலந்தின் முதல் மந்திரி, டாக்டர் பி. எஸ். ஜெர்பிராந்தி பிரிட்டனில் ஒரு பிரசங்கத்தில் கூறியிருக்கிறர். எந்தெந்த நாடுகளை ஜெர்மனி தன் ஆதிக்கத்தில் கொண்டுவந்திருக்கிறதோ, அந்தந்த நாட்டு மக்கள் எல்லோருடைய உள்ளத்திலும் வெறுப்பும், விரோதமும் உண்டாக்கியிருக்கிறதென்றும், அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் தகுதியான சந்தர்ப்பம் கிடைத்த காலத்தில் பழிக்குப்பழி வாங்குவார்களென்பது தன்னுடைய உறுதியான அபிப்பிராயம் என்றும் டாக்டர் ஜெர்பிராந்தி சொன்னர்.

யூகோஸ்லாவியாவில், உணவுப்பொருள் கொண்டு வரும் வண்டியை வழி பறிப்பதற்காக ஒளிந்து கொண்டிருந்தார்கள் என்று 14 சர்பியர்கள் இத்தாலியர்களால் கொலை செய்யப்பட்டார்கள்.

### 10. நடுநிலைமை நாடுகள்.

அயர்லாந்தில் ஜெர்மன் விமானங்கள் வெடி குண்டுகளைப் போட்டதற்காக, ஜெர்மன் அரசாங்கம் தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு வெடிகுண்டு சேதத்திற்கு நஷ்ட ஈடு கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறது.

தென்னமெரிக்காவில் உள்ள அர்ஜெண்டைனவில், ஜெர்மன் நாஜிகள் சதியாலோசனை செய்துவருகிறார்களென்று தெரிந்து, இந்த விஷயத்தை விசாரித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக, அர்ஜெண்டைன சட்ட சபை ஒரு கமிட்டியை ஏற்படுத்தியிருக்கிறது.

போர்ச்சுகல் தேசத்து வர்த்தகக் கப்பல் "கந்தா" கடல் வெடி குண்டுகளால் தாக்கப்பட்டு முழுகிவிட்டது; கப்பலில் இருந்த 66 பேரில் 26 பேர் தப்பிப் பிழைத்தார்கள். இதைக் குறித்து லிஸ்பனில் (போர்ச்சுகல் தலை நகரம்) உள்ள பொது மக்கள் மிகுந்த ஆத்திரப்படுகிறார்கள். விஷயத்தை விசாரித்து இந்தக்கொடுமையான தாக்குதலை அரசாங்கம் கண்டிக்கவேண்டுமென்று ஒரு போர்ச்சுகீஸ் பத்திரிகை கூறுகிறது.

அமெரிக்காவுக்கு வெளியில் யுத்தத்தில் ஈடுபடும் எந்த அமெரிக்க நாட்டையும் தங்களுக்கு விரோதமான நாடாகக் கொள்ளாதென்று உருகுவே (தென்னமெரிக்கா நாடு)யின் அயல் நாட்டு மந்திரி அமெரிக்கக் குடியரசு நாடுகளின் பிரதி நிதிகள் கூட்டத்தில் கூறினர்கள்.

ஸ்வீடன் நாட்டு வழியாக, ஜெர்மன் துருப்புகள் நார்வேயிலிருந்து பின்லாந்துக்குப் போவதற்கு, ஸ்வீடன் அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கிறது.

### 11. ரஷ்யா-ஜெர்மன் யுத்தம்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை (ஜூன்மீ 22உ) காலை 3½-மணிக்கு ஜெர்மனி ரஷ்யவைத் தாக்கியது. ரஷ்யாவுக்கு ஆதரவளிப்பதாக, பிரிட்டனும், அமெரிக்காவும் வாக்குறுதி கொடுத்திருக்கின்றன. (இதைப்பற்றிய விவரங்கள் இந்த இதழில் ஒரு தனிக் கட்டுரையில் காணலாம்).

---

# ஜெர்மன்-ரஷ்ய யுத்த ஆரம்பம்.

## ரஷ்யாவுக்கு பிரிட்டன், அமெரிக்க உதவி.

### ரஷ்யாவின் யுத்த பலம்.

ஜெர்மனி கடைசியாக ரஷ்யாவின் மேல் படையெடுத்துவிட்டது. சென்ற ஞாயிற்றுக்கிழமை ஜெர்மன்-ரஷ்ய யுத்தம் தொடங்கிவிட்டது. யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பு ரஷ்யாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் யாதொரு அறிவிப்பு மில்லாமல், ஜெர்மனியால் உடைக்கப்பட்டது. ஜெர்மன் பட்டாளங்கள் ரஷ்யாவில் பிரவேசித்தன. வடக்கில் பின்லாந்து துருப்புகளும், தெற்கில் ருமேனியத் துருப்புகளும், ஜெர்மனிக்குத் துணையாக ரஷ்யாவில் பிரவேசித்தன. வடக்கே பின்லாந்திலிருந்து தெற்கே கருங்கடல் வரை, அதாவது, 1,000 மைல் நீளமுள்ள போர் அரங்கம் ஜெர்மனியால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த யுத்தத்தைப் பற்றிய முதல் செய்தி, ஞாயிற்றுக்கிழமை (ஜூன்மீ 22உ) காலை 3-30 மணிக்கு ஹிட்லருடைய பிரகடனத்தின் மூலமாக, ஜெர்மன் ரேடியோவில் அறிவிக்கப்பட்டது. பிரகடனம், ஹிட்லரின் பிரசார மந்திரியான, டாக்டர் கோப்பல்சினல் படிக்கப்பட்டது. அந்தப் பிரகடனத்தில், ரஷ்யா பால்டிக் நாடுகளை ஆக்கிரமித்துக் கொண்டது ஜெர்மனிக்கு விரோதமாகத்தான் என்றும், பிரிட்டனும் ரஷ்யாவும் ஒரே நோக்கத்துடன் வேலை செய்து கொண்டு வருகின்றன வென்றும், 1940-ம் வருஷம் பால்டிக் நாடுகளில் ரஷ்யா 22 பட்டாளங்களை வைத்திருந்த தென்றும், ஜெர்மனிக்கு விரோதமாகத்தான் இது செய்யப்பட்ட தென்றும் கூறப்பட்டது. மேலும், ஹிட்லர் பிரகடனம் கூறுவதாவது :—ரஷ்யாவின் அயல் நாட்டு மந்திரி, மிஸ்டர் மாலதோவ் பர்லினுக்கு வந்திருந்தபோது நான்கு கேள்விகள் கேட்டார், அவையாவன :—

(1) ரஷ்யா, ருமேனிய பெஸ்ஸரேபியாவின் மேலும், புகோவினவின் மேலும் படையெடுத்தால், ஜெர்மனி ரஷ்யாவுக்கு ஒரு வாக்குறுதி கொடுக்க முடியுமா ?

(2) பின்லாந்து ரஷ்யாவுக்குத் தொந்தரவு கொடுத்துக்கொண்டிருக்கும் போது, ஜெர்மெனி தன் துருப்புகளை அனுப்பி, பின்லாந்துக்கு உதவி செய்யுமா ?

(3) ரஷ்யா ஒரு உத்தரவாதமான வாக்குறுதி கொடுத்துவிடு, பல்கேரியாவுக்குத் துருப்புகள் அனுப்புவதற்கு ஜெர்மனி ஒத்துக்கொள்ளுமா?

(4) டார்டனல்ஸ் வழியாக தாராளமாகச் செல்வதற்கும் பாஸ்பரஸ்ஸில், தரைப் படைத் தளமும், கடற்படைத் தளமும் ரஷ்யா ஏற்படுத்துவதற்கு வேண்டிய உரிமையை ஜெர்மெனி கொடுக்குமா?

பிரகடனத்தின் முடிவில், போல்ஷிவிக் கொள்கையைக் கண்டித்து ஹிட்லர் கூறியதாவது:—"நாஸிக் கொள்கையும், போல்ஷிவிக் கொள்கையும், பரஸ்பரம் விரோதமானவை. தன்னுடைய உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் பொது தேசீய பொதுவுடைமைக் கொள்கையுடைய ஜெர்மெனியை, போல்ஷிவிக் கொள்கையுடைய ரஷ்யா பின்பக்கமிருந்து கத்தியால் முதுகில் குத்த விரும்புகிறது. கிழக்கு எல்லையில் இந்த அபாயம் இருக்கும் போது ஜெர்மெனி சும்மாயிருக்க முடியாது. இந்த யுத்தத்தில் ஜெர்மானியர் தம் தாய் நாட்டை மாத்திரம் பாதுகாக்கவில்லை. போல்ஷிவிக் கொள்கையின் ஆபத்திலிருந்து நாகரிகத்தைத் தப்புவிக்கவும், ஐரோப்பாவில் உண்மையான சமூக முன்னேற்றம் ஏற்படுவதற்காகவும் ஜெர்மானியர் பாடுபடுகின்றனர்."

## ஒப்பந்த முறிவின் காரணம்.

ரஷ்ய-ஜெர்மென் ஒப்பந்தம் முறிந்ததற்கு, ஜெர்மெனியின் அயல் நாட்டு மந்திரி, ஹெர் வான் ரிப்பன்ட்ராப், சில காரணங்களைக் கூறுகிறார். அந்தக் காரணங்களடங்கிய ஒரு அறிக்கை, பர்லினில் உள்ள ரஷ்ய ஸ்தானீகரிடம் கொடுக்கப்பட்டது. அந்த அறிக்கையின் சுருக்கமாவது:—ஜெர்மெனி ரஷ்யாவுடன் நேசப்பான்மையாய் இருந்தும், ரஷ்யா ஜெர்மெனிக்கு விரோதமாக விஷமப் பிரசாரம் செய்து கொண்டுவந்தது. இதற்குத் தக்க ருசுக்கள் ஜெர்மெனியிடம் இருக்கின்றன. ஜெர்மெனியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை, ரஷ்யா ஒரு ராஜ தந்திரமாக நினைத்துவிட்டது. பிரசாரத்தில் மாத்திரமல்லாமல், அரசியல் விஷயங்களிலும், ராணுவ விஷயங்களிலும் ஜெர்மனிக்கெதிராக ரஷ்யா நடந்து வந்திருக்கிறது. தன்னுடைய எல்லையோரத்தில், ரஷ்யா ஏராளமான துருப்புகளைச் சேர்த்து வைத்திருக்கிறது. இதனால் ரஷ்ய—ஜெர்மன் ஒப்பந்தத்தை ரஷ்யாவே உடைத்துவிட்டது.

ரஷ்யாவின் அயல்நாட்டு மந்திரி, மிஸ்டர் மாலதோவ், ஜெர்மனியின் அதிக்கிரமத்தைக் கண்டித்து ரேடியோமூலம் பேசினார். அவர் பேசியதன் சுருக்கமாவது:—யாதொரு காரணமும் சொல்லாமல், யுத்த ஆரம்ப அறிவிப்பு இல்லாமல், திடீரென்று ஜெர்மன் துருப்புகள் எங்களுடைய நாட்டைத்தாக்கியிருக்கின்றன. ஸிடோமீர், கீவ், செபாஸ்டபூல், கௌனஸ் முதலிய பல பட்டணங்கள் தாக்கப்பட்டன. 200 பேருக்குமேல் கொல்லப்பட்டும், காயப்பட்டுமிருக்கிறார்கள். ரஷ்யா ஜெர்மனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி நடந்துகொண்டு வந்திருக்கிறது. ரஷ்யாவின்மேல் காலை 4-மணிக்கு படையெடுத்து, ஒன்றரை மணி நேரம் கழித்து, அதாவது காலை 5-30 மணிக்கு ஜெர்மன் ஸ்தானீகர் அவருடைய அராங்கத்தின் சார்பாக ஒரு அறிக்கை கொடுத்தார். அதில் ரஷ்யா தன்னுடைய எல்லையில் துருப்புகள் வைத்திருப்பதைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், இதைப்பற்றி கடைசி நிமிஷம் வரைக்கும் ஜெர்மனி யாதொரு ஆட்சேபனையும் சொல்லவில்லை. ரஷ்யா சமாதானமாய் இருந்தும், ஜெர்மனி அதைத் தாக்கியதால், ஜெர்மனிதான் அதிக்கிரம நாடாகிறது. ரஷ்ய ஆகாய விமானப்படை இதுவரை எந்த தேசத்தின் எல்லையையும் தாண்டிப்போகவில்லை. ருமேனிய விமானச்சாலையைத் தாக்கியதாகக் கூறுவது முழுப்பொய். ரஷ்யாவைத் தாக்க முயன்ற நெப்போலியனுடைய முயற்சியை ரஷ்யா பாழ்படுத்தியது. அதைப்போல இப்போது கர்வம் மிகுந்த ஹிட்லருடைய முயற்சியும் வீணாக்கப்படும். ரஷ்யா இந்த யுத்தத்தில் வெற்றிபெறும் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ரஷ்யாவினுடைய எதிரிகளாகிய ரத்த ஆவேசங்கொண்ட ஜெர்மன் பாஸிஸ்டுகளை ரஷ்யா அடியோடு நசுக்கிவிடும்.

## உண்மையான காரணம்.

உண்மையில் நோக்குமிடத்து, ஜெர்மனி ரஷ்யாவுடன் போர்தொடுத்ததன் காரணம் கொள்கையைப் பற்றியல்ல; ரஷ்யாவில் உள்ள கோதுமையும், பெட்ரோலும்தான். அதிக காலமாக, ரஷ்யாவின் செழிப்பான மாகாணமாகிய யூக்ரெயினின்மேல் ஜெர்மனி கண் வைத்திருந்தது. அதல்லாமல், பிரிட்டனைத்தாக்குவதற்கு முன், தனக்கு எப்போதாவது எதிரியாகக்கூடிய ரஷ்யாவை ஒழித்துவிட வேண்டுமென்பது ஜெர்மனியின் விருப்பம்.

ஆனால் ரஷ்யாவை ஒழித்துவிடுவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. பிரிட்டனும், அமெரிக்காவும் ரஷ்யாவுக்கு உதவியளிப்பதாக வாக்குறுதியளித்திருக்கின்றன. பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், ரேடியோமூலம் பேசுகையில் "ரஷ்யாவுக்கும், ரஷ்ய மக்களுக்கும் எங்களாலான உதவியை நாங்கள் செய்வோம்," என்று கூறினார். மேலும் அவர் கூறியதாவது:—"எங்களுக்கு ஒரே நோக்கம் தான் இருக்கிறது. எப்படியாவது ஹிட்லரையும், நாஸிக்கொள்கையையும் அழித்துவிடவேண்டும். அதற்காக, ரஷ்யாவுக்கு வேண்டிய உதவியைச்செய்வோம். எங்களுடைய நண்டர்களையும், நேசதேசத்தார்களையும் அதே மாதிரி செய்யும்படிகேட்டுக்கொள்ளுகிறோம். ரஷ்யாவுக்கு வந்த தீங்கு நமக்கு வந்த தீங்காகும்; அமெரிக்காவுக்கு வந்த தீங்காகும். ஜெர்மனியைப்பகலிலும் இரவிலும் வெடி குண்டுகளால் தாக்குவோம்."

பிரசிடெண்ட் ரூஸ்வெல்டும் ரஷ்யாவுக்கு எல்லாவித உதவியும் அமெரிக்கா அளிக்கும் என்று வாக்குறுதியளித்திருக்கிறார்.

பிரிட்டனுடைய உதவியும், அமெரிக்க உதவியும் ரஷ்யாவுக்கு இருக்கிறது; அதனுடைய சொந்த பலமும் ஜெர்மனியைத் தோற்கடிக்கும் தன்மையுடையதாய் இருக்கிறது. ரஷ்யாவின் விமானப் படை உலகத்திலேயே மிகப்பெரிது. குறைத்துக் கூறினாலும், ஜெர்மனிக்குச் சமமானது என்று சொல்லலாம். ஜெர்மனி இப்போது பல இடங்களில் சண்டை போடுகிறது. அதனுடைய விமானபலம் சிதறியிருக்கிறது; ஆனால் ரஷ்யா ஒரே அரங்கத்தில் போர் செய்கிறது. ரஷ்யாவிடம் 24 வருஷமாக படையெடுப்பைத் தடுப்பதற்குத் தயார் செய்யப்பட்ட பிரம்மாண்டமான விமானப்படை இருக்கிறது. ரஷ்யாவின் தரைப்படையும் கடற்படையும், யுத்தத்திற்காக அநேக வருஷங்களாக பயிற்சிபெற்று, திறமை வாய்ந்தவைகளாக இருக்கின்றன. ஆகையால், ஜெர்மனி ரஷ்யாவைத் தோற்கடிப்பது என்ற முயற்சி சுலபமானதல்ல.

## கடுமையான யுத்தம்.

ஜெர்மானியர்களுக்கும், ரஷ்யர்களுக்கும் கடுமையான யுத்தம் பல இடங்களில் நடைபெறுகிறது. ஜெர்மானியர்கள் லிதுவேனியாவின் பழைய தலைநகரமான வில்நாவைப் பிடித்திருக்கிறார்கள்; பழைய ரஷ்யாவின் தலைநகரமான லெனின் கிராடின் மேல் வெடிகுண்டுகளைப் போட்டார்கள். ஹிட்லரே யுத்த அரங்கத்தில் துருப்புகளுடன் இருப்பதாக ஜெர்மன் யுத்த அறிக்கை கூறுகிறது. இதற்குப்பதிலாக, ரஷ்யாவின் விமானப்படை ருமேனியாவின் கருப்புக்கடல் துறைமுகமான கான்ஸ்டான்சாவின்மேல் பலமாகத் தாக்கியிருக்கிறது. சுலீனா, டான்சிக், கானிக்ஸ்பர்க், வார்சா, லப்லின் முதலிய முக்கியமான இடங்களை ரஷ்ய விமானப்படை தாக்கிற்று. ஜெர்மன் துருப்புகளின் முன்னேற்றம் தடைப்படுத்தப்பட்டு, ஒரு மோட்டார் படை முழுவதும் நாசம் செய்யப்பட்டது.

கடைசியாக வெளியான செய்திகள் கூறுவதாவது:—போலந்தில் எல்லைப்புற பட்டணத்தை ரஷ்யா பிடித்துவிட்டது; ரஷ்ய விமானங்கள் புகாரெஸ்டைத் தாக்கின; கானிக்ஸ்பர்க், மெமெல் முதலிய இடங்கள் தாக்கப்பட்டன; ஜெர்மானியர் முன்னேற்றத்தை ரஷ்யா பலமாகத்தடுத்து வருகிறது; ரஷ்யாவின் மேல் பின்லாந்து போர் தொடுத்திருக்கிறது; துருக்கி மூலமாக ஜெர்மனி சில சமாதானப் பேச்சுகளை அனுப்பியதென்றும், பிரிட்டன் சமாதானத்துக்கு ஒப்ப மறுத்து விட்டதாகவும் தெரிகிறது.

# இராக்கில் அமைதி.

## சிரியாவில் பயமின்மை.

இராக்கில் இப்போது அமைதி நிலவுகிறது. ரயில்வே, தந்தி, தபால், பொது இலாகாக்கள் முதலியன ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. கொள்ளைகளும், கலகங்களும் அடக்கப்பட்டன. ரஷீத் அலியின் துரோகச் செய்கைகளை இராக் பொதுமக்கள் நன்றாக அறிந்துகொண்டார்கள். அவர் ஒரு பெருத்த லஞ்சத் தொகைக்காக நாட்டைக் காட்டிக் கொடுக்க முயற்சித்தார் என்ற விஷயம் வெளிப்படையாய்விட்டது. பிரிட்டன் இராக்கின் சுதந்தரத்துக்கு மதிப்புக் கொடுத்து, அதன் அரசாட்சியை வலுப்படுத்தியிருக்கிறது. அலெக்சாண்டிரியா, ஹைபா முதலிய இடங்களில் ஜெர்மனி வெடிகுண்டுகள் போடுவதும், இராக்கில் அமைதி நிலவுவதும், ஜெர்மனிக்கும், பிரிட்டனுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண்பிக்கிறது.

சிரியாவில் ஜெர்மானியர்கள் கள்ளத்தனமாகப் பிரவேசித்து நாட்டைக் கைப்பற்ற முயலுகிறார்கள் என்று தெரிந்தபின்பே, பிரிட்டன் பலமான முறைகளைக் கையாள ஆரம்பித்தது. சிரியாவில் ஜெர்மன் முயற்சி பிரயோசனப்படவேயில்லை. பல்கரியாவில் செய்த ஏமாற்றுத் தந்திரம், சிரியாவில் செல்லவில்லை. இப்போது ரஷ்ய யுத்தத்தில் ஜெர்மனி ஈடுபட்டிருப்பதால், சிரியாவுக்கு யாதொரு பயமுமில்லை என்று சொல்லலாம்.

---

# சிசிலியின் கால்வாய்.

மத்தியதரைக்கடலில் மற்றொரு முக்கியமான பாகம் சிசிலியின் கால்வாய் என்பது. அதனுடைய குறுகிய பாகம் அதாவது, தென் கிழக்கு சிசிலிக்கும், பிரெஞ்சு ஆப்பிரிக்காவிலுள்ள டூனீஸ் கரையோரத்திற்கும், 90 மைல் அகலமுள்ளது. இடலிக்கு லிபியாவிலுள்ள இன்னும் ஒரு முக்கியமான துறைமுகமாகிய டிரிபோலிக்கும் பசிரோ முனைக்கும் 290 மைல்; டிரிபோலிக்கும் கடேனியாவுக்கும் 360 மைல். இவைகளுக்கு மத்தியில். பிரிட்டிஷ் தீவுக் கோட்டையாகிய மால்டா குறுக்கேயிருக்கிறது. இருந்த போதிலும், இடாலியக் கப்பல்கள், இடலி, சிசிலி கரையோரமாகவே மேற்கே போய், இருட்டு நேரங்களில் தென்மேற்குத் திசையாகத் திரும்பி, ஆப்பிரிக்காவில் உள்ள துனீசியா கரையோடு லிபியாவுக்குச் செல்லலாம். சிசிலி, துனீசியா இவைகளின் கரையோரங்களில் பாதுகாப்பு சப்பல்கள் போனால், சிசிலி, லிபியாவில் விமானத் தளங்கள் வைத்துக்கொண்டு அங்கிருந்து வேலை செய்யும் ஆகாய விமானங்களினால் கப்பல்களுக்கு வேண்டிய துணை உதவி செய்யலாம். பிரிட்டன் மால்டா என்ற ஒரு இடத்திலிருந்துதான் கப்பற் போக்கு வரத்துகளைத் தடை செய்ய முடியும். பிரிட்டிஷ் ஆகாய விமானப் படை, சிசிலியின் கரையோரத்தைத் தாக்குவதென்றால் அதற்கு "பைடர்ஸ்" என்ற ஆகாய விமானங்களின் பாதுகாப்பு அவசியம் வேண்டியிருக்கிறது. மால்டாவுக்கு அருகில் ஜெர்மனி, இடலி இவைகளுடைய ஆகாய விமானத் தளங்கள் இருப்பதால் கப்பற் படையின் விமானங்கள் போர் புரிவதென்பது சுலபமல்ல; அவைகள் மிகவும் குறைந்த எண்ணிக்கை உடைய காரணத்தால், மத்தியதரைக் கடலின் மத்திய பாகத்தில் அநேக சிறு கப்பல்கள் வேண்டியதாயிருக்கின்றன. இப்போதிருக்கிற நிலையில் அவைகள் இந்த வேலைக்குக் கிடைப்பது கொஞ்சம் கஷ்டம். ஏனென்றால், பிரிட்டிஷ் கப்பற் படை சென்ற உலக யுத்தத்தில் ஐந்து பெருங் கப்பற் படைகள் செய்த வேலையைத்தான் இப்போது செய்து கொண்டு வருகிறது. அந்த ஐந்து கப்பற் படைகள் பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான், பிரஞ்சு, இடலி ஆகிய ஐந்து வல்லரசுகளுடையது.

பிரிட்டிஷ் சப்மரீன்கள் மால்டாவிலிருந்து வேலை செய்யலாம். இதற்கு லிபியாவிலுள்ள பென்காசி என்ற துறைமுகம் மிகவும் உதவியாயிருக்கும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகளால் கைப்பற்றப்பட்ட பென்காசி, மால்டாவிலிருந்து 410 மைல் தூரமுள்ளது. அந்தத் துறைமுகம் தயாரானதும், பெரிய யுத்தக் கப்பல்களுக்கும், தூரதிருஷ்டி ஆகாய விமானங்களுக்கும், ஒரு தங்குமிடமாக உபயோகப்படுத்தலாம். அங்கிருந்து மத்தியதரைக்கடல் மத்தியப் பிரதேசத்தில் பிரிட்டிஷ் கடற் படை மேற்பார்வை பார்ப்பதற்கு அனுகூலமாயிருக்கும்.

லிபியாவிலும், எரீட்ரியாவிலும், இந்தியத்துப்பாக்கிப்படையும், காலாட்படையும், சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ் என்ற படையும் தைரியத்தோடும், திறமையோடும் போர்புரிந்து, நம் நாட்டுக்குப் பெருமையைக் கொண்டுவந்திருக்கின்றன. சென்ற உலக மகாயுத்தத்தில் வெப்பமான பாலஸ்தீனப் பிரதேசத்திலும், சேரும் பனியும் நிறைந்த பிரான்சு தேசத்திலும், இந்திய சிப்பாய்கள் போர்புரிந்து பேரும் புகழும் பெற்றது நினைவுக்கு வருகிறது. இப்போது நடைபெறும் யுத்தத்தில் ஜெனரல் சர் ஆர்ச்சிபால்டு வேவல் என்ற ஆப்பிரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் தளகர்த்தர் இந்திய சிப்பாய்களைப்பற்றிப் பாராட்டிக் கூறியிருக்கிறார். அவர்களுடைய சுறுசுறுப்புத்தன்மையையும், திறமையையும் கண்டு, லிபியா போர் ஆரம்பமாகிய சிடிபரானி முற்றுகையை ஆரம்பிக்கும்படியான பெருமையை, அவர் இந்திய சிப்பாய்களுக்குக் கொடுத்தார். இந்தியர்கள் கௌரவத்தோடும், தைரியத்தோடும் நடந்துகொண்டு, ஆப்பிரிக்க வெற்றிகள் பலவற்றில் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆப்பிரிக்கா வெற்றிகள் உலகத்திற்கு உற்சாகமும், மகிழ்ச்சியும் அளித்தன.

தனிப்பட்ட முறையில், இந்திய சிப்பாய்கள் தங்களுடைய வீரத்தைக் காண்பித்திருக்கிறார்கள். காக்னி என்ற இடத்தில், ஒரு இந்தியக் கமிஷன் ஆபீசர், மெஷீன் துப்பாக்கிகளால் சுடப்பட்ட இடத்தின்வழியாக, தன்னுடைய சிப்பாய்களை அழைத்துக்கொண்டு போய் ஒரு செங்குத்தான பிரதேசத்தில் நின்றார். பகைவர்களுடைய தாக்குதல்களையெல்லாம் பொறுத்துக்கொண்டிருந்து முடிவில் அந்த இடத்தை விட்டு விட்டு மறுவிடத்துக்குப் போகவேண்டியிருந்தது. அப்போது அந்த ஆபீசர் காயம்பட்டிருந்தார். இருந்த போதிலும் அவர் தன்னுடைய சிப்பாய்களை பத்திரமான இடத்துக்குக் கொண்டுபோய்விடுகிற வரைக்கும் தன்னுடைய நிலைமையை அவர் ஒரு பொருட்டாக நினைக்கவில்லை.

காயமடைந்த ஒரு சிப்பாயை தூக்கிக்கொண்டு போகும்போது, பகைவர்கள் சூழ்ந்துகொண்டதால், சிப்பாயின் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு, பகைவர்களை விரட்டியடித்துத் துரத்திவிட்டு, அந்த சிப்பாயைப் பத்திரமான இடத்துக்கு ஒரு சிகிச்சைப்படையைச் சேர்ந்த ஒருவன் அழைத்துப்போனான். ஒரு டோக்ரா மெஷின் துப்பாக்கிக்காரன், தனிப்பட்டு நின்று ஏராளமான எதிரிகள் சூழ்ந்துகொண்டபோது, இடைவிடாது அங்கிருந்த எதிரிகளை துப்பாக்கியால் சுட்டு, முடிவில் ஒரு வெடிகுண்டு விழுந்து உயிரிழந்தான். இறந்தபிறகுங்கூட அவனுடைய கைவிரல் துப்பாக்கிக் குதிரையின்மேல் இருந்தது. ஒரு சிறு பஞ்சாப்தேசத்து சிப்பாய் ஒரு சிறு கூட்டத்தைக் கூட்டிக்கொண்டு துப்பாக்கிகள் சுடுக்கொண்டிருக்கும்போது தைரியமாக அவைகளைத் தாண்டி, பகைவர்களுடைய மெஷீன்கன் ஸ்தானங்களை அழித்து, தன்னுடைய சகாக்களை உற்சாக படுத்திக் கொண்டிருக்கும்போது சுடப்பட்டு, தன்னையாரும் தூக்கிக்கொண்டு போகக்கூடாதென்று கூறிவிட்டு தானே வைத்திய சிகிச்சைச்சாலைக்குப் போனான்.

குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.
[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS: PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.